


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

*கொலோசெயர் 3 : 16*

மரம் 1 ஜனவரி 2001 கனி 2

ஆசிரியர்
B. அர்ஜூனன்

## முதல் வாசகர் கருத்தரங்கம்

10.1.2001

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள் இக்கருத்தரங்கத்திற்கு கன்னியாகுமரி மற்றும் அன்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம்:**
- ❑ 1992 முதல் 2000 வரை வெளிவந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு
- ❑ இந்த முதலாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
- ❑ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு.

**நாள் : ஜனவரி 27ம் தேதி சனிக்கிழமை, மாலை 4.00 மணி**

**இடம் : கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்**
செந்தூரன் நகர், 240M கோமதி நர்சிங் ஹோம் எதிர்புறம்,
சாரளூர், கோட்டார் P.O. நாகர்கோவில் – 624 902.

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 23278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
சகோ. V. அந்தோணிசாமி ✆ 41610

*அன்புடன்,*
**ஆசிரியர்**

*வாருங்கள் !* *பங்கு பெறுங்கள் !!* *அறிந்து கொள்ளுங்கள் !!!*

## இதழின் உள்ளே . . .

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள் | 1 |
| 2. | மன்னிப்பு | 5 |
| 3. | தெரிந்து கொள்ளுங்கள் | 9 |
| 4. | ஒரு வழி பாடம் | 10 |
| 5. | அத்தி மரம் (சிறுவர் பகுதி) | 13 |
| 6. | பெண்கள் பகுதி | 14 |
| 7. | நீதிமான்களைக் குறித்து நீதிமொழிகளில் | 17 |
| 8. | படங்களும், சுருக்கமான வர்ணணைகளும் | 19 |
| 9. | புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 20 |
| 10. | நடப்பு செய்திகள் | |


**FOR FREE DISTRIBUTION**

"Go ye into all the world, and preach the gospel to every creature" mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 | ஜனவரி 2001 | கனி 2

ஆசிரியருரை

## மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள்

## Profitable unto men

இப்புத்தாண்டில் இச்செய்தியின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மனுஷனுக்கு பிரயோஜனமானவைகளைக் குறித்து நாம் அதிகமாக கேள்விப்பட்டிருக்கின்றோம். அவைகளில் சில இவ்வுலக வாழ்க்கைக்கு போதுமானதாக இருக்கலாம். ஆனால் இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமானவைகளைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். "சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப்பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது". (1 தீமோ. 4:8). இன்றைய உலகத்தில் ஜனங்கள் சரீரமுயற்சிக்கே அதிக முக்கியதுவம் கொடுக்கின்றார்கள். சரீரமுயற்சி வெளிபிரகாரமான பக்தியையே உண்டாக்கும். அதனால் நாம் தேவனுக்கு பிரியமாக இருக்க முடியாது. மனிதன் இவ்வுலகத்தில் நடக்க வேண்டிய வழியையும், கீழ்படிய வேண்டிய கட்டளைகளையும், அவனுக்கு பிரயோஜனமானவைகளையும் தேவன் தமது பரிசுத்த வேதாகமத்தின் மூலம் அறிவித்துள்ளார். அவைகள் மனுஷருக்குப் பிரயோஜனமானவைகளாகவும், போதுமானவைகளாகவும் இருக்கிறது.

நாம் தேவனை அறியாதிருந்த நாட்களில் "புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழி தப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" என (தீத்து 3:3-5)ல் வாசிக்கின்றோம். நமது முற்கால வாழ்க்கையை எண்ணிப் பார்க்கும்போது பகைக்கப்படத்தக்கவர்களும், தேவனுக்கு விரோதிகளாகவும், சத்துருக்களாகவும்



ஜீவித்திருக்கிறோம். அப்படியிருந்த நம்மை அவருடைய இரக்கத்தினாலே இரட்சித்து, மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளவர்களாய் இருக்கும்படியாகவும், சாரமேறின உப்பாகவும், வெளிச்ச முள்ளவர்களாகவும் நம்மை மாற்றியமைத்துள்ளார். இப்படி அவருடைய இரக்கத்தினாலே இரட்சிகப்பட்ட ஒவ்வொருவரும் இப்புத்தாண்டில் அவருடைய வார்த்தையின்படி ஜீவிக்க வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது.

**அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் :**

கிறிஸ்து இயேசுவைத் தரித்துக்கொண்ட ஒவ்வொருவரும் தேவனாலே ஏற்படுத்தப்பட்ட சகல அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது. "மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்படியுங்கள்". (1 பேது. 2:14). "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன், ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவானாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்" (ரோ. 13:1,2). அதிகாரங்கள் எல்லாமே தேவனாலே ஏற்படுத்தப்படுகிறது என்பதை நாம் ஒருக்காலும் மறந்துவிடக்கூடாது. தேவனை அறியாத மக்கள் நம்மை ஆளுவதா? அவர்களுடைய ஆளுகையின் கீழ் நாம் நடப்பதா? என்று எதிர்ப்பவர்கள் அதிகம். நம்முடைய முற்பிதாக்களாகிய இஸ்ரவேல் புத்திரரை கவனித்துப் பாருங்கள் அவர்கள் "எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்று முப்பது வருஷம்" (யாத். 12:40) அந்நிய பிடியில் இருந்தார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை அவ்விதமாக ஒப்புக்கொடுத்திருந்தார். "என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகை செய்து வருகிறார்கள்" (நீதி. 8:16). கர்த்தராலே மேலான அதிகாரங்கள் யாவும் நியமிக்கப்படுகிறது. எனவே இவைகளுக்கு நாம் கீழ்ப்படியவும், இந்த அதிகாரங்களுக்காக நாம் ஜெபிக்கவும் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம். "நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும் படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளயாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்" (1 தீமோ. 2:2).

**சகலவிதமான நற்கிரியைகளையுஞ் செய்யுங்கள் :**

"நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே. 2:10). நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதே நன்மை செய்யவும், தானதர்மம்பண்ணவுமே. ஆண்டவராகிய இயேசுவை கவனித்துப்பாருங்கள். அவர் நன்மைசெய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார்

என காண்கிறோம். நீங்களும் நானும் இப்புத்தாண்டில் நற்கிரியைகளைச் செய்வதில் சோர்ந்து போகாதிருப்போம். "நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 பேது. 2:15) என்ற வார்த்தைக்கேற்ப யோசேப்பு அவன் சகோதரர்களால் அவ்வழியே சென்ற இஸ்மவேலர்கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டும் அவன் தன் சகோதர்களை நேசித்து அவர்கள் பஞ்சத்தினால் தானியம் கொள்ள எகிப்திற்கு வந்தபோது அவர்களுக்கு நல்லதே செய்தான். இந்த யோசேப்பைப் போல நாம் நன்மை செய்து புத்தியீனருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

**ஒருவனையும் தூஷியாதிருங்கள் :**

எங்கு பார்த்தாலும் மக்கள் மத்தியில் தூஷணவார்த்தை பெருகியிருக்கிறது. மேலும் இக்கால கட்டத்தில் தூஷணவார்த்தை என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. கிறிஸ்தவர்கள் மத்தியிலும் இவை தலைவிரித்தாடுகிறது. இதைக் குறித்து யாக்கோபு குறிப்பிடும்போது "துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது" (யாக். 3:10). அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். மேலும் அதனாலே தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை சபிக்கின்றோம். பிரதாண தூதனாகிய மிகாவேல் "மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது அவனைத் தூஷணமாய்க் குற்றப் படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடித்து கொள்வாராக என்று சொன்னான்" (யூதா. 9). நமக்கு எதிராளி பிசாசு ஒருவனே. அவனையே தேவதூதன் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல் இருக்கும் போது நாம் தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட ஒரு மனுஷனை தூஷிக்கலாமா? தீத்து 3:2ல் சொல்லப்பட்டபடி ஒருவனையும் தூஷியாதிருப்போம்.

**சண்டை பண்ணாதிருங்கள் :**

சண்டை இல்லாத வீடும் இல்லை, நாடும் இல்லை, என்றே சொல்லலாம். "சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்குவதே நலம்" என்று (நீதி. 25 : 24)ல் சாலமோன் குறிப்பிடுகிறார். சண்டையினால் இதுவரை கோடிக்கணக்கான மக்கள் அழிந்து போயிருக்கிறார்கள். சண்டையிடுவதால் வீட்டிற்கும் லாபமில்லை நாட்டிற்கும் லாபமில்லை. நாம் சமாதானமாயிருக்கும்படியே அழைக்கப்பட்டுள்ளோம். "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்" ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்றயாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்" (1 தெச. 5:15). இங்கு பவுலின் ஜீவியத்தைக் கவனியுங்கள். கன்னானாகிய அலெக்சந்தர் என்பவன் பவுலுக்கு வெகு தீமைசெய்தான். ஆனால் பவுலோ, அவனுக்கு பதில் ஒன்றும் செய்யாமல் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்றான். நீங்களும் இந்த

பவுலைப்போல சண்டைபண்ணாமல் கர்த்தருடைய சமூகத்தில் ஒப்படைத்து விட்டு சமாதானமாயிருக்க நாடுங்கள்.

**பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தை காண்பியுங்கள்:**

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில் "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (மத். 5:5) என்றார். சாந்தகுணமுள்ளவர் களாயிருக்கும்போது அநேகரிடத்தில் தயவையும், நீடித்த ஆயுளையும் பெற்று இப்பூமியில் சமாதானத்தோடு வாழும் பாக்கியத்தைப் பெறுவோம். மேலும் "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிறயாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1 பேது. 3:15) என்ற வசனப்படி சாந்தத்தோடு மற்றவர்களுக்கு உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க நம்மை பழக்குவித்துக் கொள்ள வேண்டும். பொறுத்து, பொறுத்து பொறுமையை இழந்துவிட்டேன் என்று அநேகர் சொல்ல கேள்விப்பட்டு இருக்கிறோம். தேவமனிதனாகிய "யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார்" (யாக். 5:11). இந்த யோபுவைப்போல தேவ சமூகத்தில் பொறுமையோடு காத்திருந்து எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தை காண்பியுங்கள். அப்பொழுது நிறைவான ஆசீர்வாதங்களைப் கர்த்தராலே பெறுவீர்கள்.


பிரியமான சகோதரனே, சகோதரியே மேற்கண்ட காரியங்கள் அனைத்தும் நமது ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிக முக்கியமானவைகள் என்று எண்ணுகிறேன். இவைகளை இப்புதுவருடத்தில் உங்களது ஜீவியத்தில் ஏற்று, இருதய பலகையில் எழுதிக்கொண்டு, அனுதின ஜீவியத்தில் வெற்றி நடைபோடும்படி உங்களை வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறேன். "இந்த வார்த்தை உண்மையுள்ளது தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்" (தீத்து. 3:8) என்ற பவுலின் வார்த்தைப்படி இவ்வருடத்திற்கு நினைப்பூட்டுதலாக இச்செய்தியை உங்களுக்கு அளித்துள்ளேன். பல முறை வாசித்து பலன் பெறுங்கள். "கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர்பொருந்துங்கள் ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்" (2கொ. 13:11).

**ஜெபியுங்கள்**

1. இவ்வருட ஊழியங்களுக்காக
2. வாசகர் கருத்தரங்கிற்காக
3. சகோதரி சிந்தாமணியின் சுகத்திற்காக

# மன்னிப்பு

# REMISSION



J.C. Choate

மன்னிப்பு என்பது ஒரு மகத்தான சொல் என கூறப்பட்டிருக்கிறது. பாவத்தின் காரணமாக மன்னிப்பு தேவைப்படுகிறது. தேவனுடைய சட்டத்தை மீறுவதால் பாவம் ஏற்படுகிறது. (1 யோவான் 3:4) தங்களுடைய பாவத்தைப்பற்றி அறிந்து கொள்வதில்லை. ஏனென்றால் பாவமானது மிகவும் ஏமாற்றக்கூடிய ஒரு குணம் படைத்தது. (எபி. 3:13). அறியாமலேயே அவனுடைய வாழ்வில் அது புகுந்து மெதுவாக அவனை தன் வசப்படுத்தி கடினப்படுத்தி விடுகிறது. எனவே, கேள்விக்குரிய, தேவனுக்கு விரோதமான பழக்கங்களில் ஈடுபடவும், அதற்காக எவ்வித வருத்தமும் படாத நிலையும் ஏற்படுத்துகிறது. பாவம் பெருகக்கூடியது. "ஒரு பொய் மற்றொரு பொய்க்கு இட்டுச் செல்லுகிறது" என்ற பழமொழி உண்மையே! பாவமானது ஒருவனைப் பற்றிக் கொண்டு, இறுதியில் அழிவுக்குக் கொண்டு செல்கிறது. இது தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவது அல்ல; மாறாக எல்லாருக்கும் இது பொருந்தக் கூடியது. ஏனெனில், எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி . . . (ரோமர் 3:23) என வசனம் கூறுகிறது. கடைசியாக, பாவம் மரணத்தைக் கொண்டு வருகிறது. (ரோமர் 6:23)

இயேசுகிறிஸ்து மூலமாக ஒரே ஒரு வழி மட்டுமே உண்டு. (யோவான் 14:6) இந்தக் காரியத்திற்காக தேவனால் அவர் அனுப்பப்பட்டார். (யோவான் 3:16) இந்தக் காரணத்தினால் உலகத்தின் பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். (ரோமர் 5:8) எனவே, இது உண்மையாக இருப்பதினால் மன்னிப்பின் நிபந்தனைகளை விதிக்க கிறிஸ்து மாத்திரமே நியாயமான உரிமை உடையவர். மனிதன் பாவியாக இருக்கிறான். எதைச் செய்ய வேண்டும் என்றோ அல்லது எதைச் செய்யக் கூடாது என்றோ திட்டமிட அவனுக்கு உரிமை இல்லை. அவன் செய்ய வேண்டியவை மன்னிப்புக்குரிய நிபந்தனைகளுக்கு பணியவும், பாவங்கள் மன்னிக்கப்பட இன்னும் நேரமும் சந்தர்ப்பமும் இருப்பதற்காக கர்த்தருக்கு நன்றி சொல்லவும்.

பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான நிபந்தனைகள் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கட்டளைகள் வரையறுக்கப்பட்டு, கீழ்ப்படிதல் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைக் காட்ட உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டளைகளைப் பாருங்கள், கிறிஸ்து கூறுவதைக் கேளுங்கள், (மத்தேயு ?:5 உன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு) (லூக்கா 13:3), கிறிஸ்துவில்

(உன் விசுவாசத்தை அறிக்கை செய் மத்தேயு 10:32) இரட்சிக்கப்பட திருமுழுக்குப் பெறு (மாற்கு 16:16). உதாரணங்களுக்காக, குறிப்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தைப் பாருங்கள் (அப்2; அப்.8; அப்.9; அப்.16 மற்றும் பல) இதைச் செய்யும் போது, மனிதன் சொல்லுவதும் கர்த்தர் சொல்லுவதும் ஒன்றல்ல என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்து இரட்சகராக இருக்கிறார், உங்களுக்கு மன்னிப்பு தேவையென்றால், இயேசு செய்யச் சொல்லுவதை நீங்கள் செய்வதே நல்லது. இல்லையெனில் நீங்கள் வீழ்ந்து போவீர்கள். (மத்தேயு 7:21)

மன்னிப்பின் மகத்துவத்தை கீழ்க்கண்டவைகளில் காணலாம். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டால், நமது பாவங்கள் வெகு தூரத்திற்கு அனுப்பப்பட்டு விட்டன என்று கருதலாம். லேவியராகமம் 16ம் அதிகாரத்தில் ஆரோன் இரண்டு ஆடுகளை எடுத்துச் சென்றதைப் பற்றி படிக்கிறோம். அவற்றில் ஒன்றை இஸ்ரவேல் மக்களின் பாவங்களின் பரிகாரமாகப் பலியிடுகிறான். அடுத்ததை எடுத்து, அவர்களுடைய பாவங்கள் அனைத்தையும் அதின் மேல் அறிக்கையிட்டு, வனாந்தரத்திற்குள் வெகு தொலைவில் அதை அனுப்பிவிடுகிறான். இந்த ஆடு போக்காடு என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் எல்லா இஸ்ரவேலருடைய பாவங்களையும் அது சுமந்து வெகு தொலைவாக அனுப்பப்பட்ட படியால், இஸ்ரவேலர் மீண்டும், பரிசுத்தமாக இருப்பர். கர்த்தருக்கு நாம் கீழ்ப்படியும் போது நமது பாவங்கள் வெகு தொலைவுக்கு எடுத்துப் போடப்பட்டு நாம் எப்போதும் அந்தப் பாவங்கள் இன்றி இருக்கலாம். இது ஒரு நல்ல கருத்து அல்லவா? உங்கள் பாவங்கள் அனைத்தும் எடுத்துப் போடப்பட நீங்கள் விரும்பமாட்டீர்களா?

நமது பாவச்சுமையை நம்மிடமிருந்து கிறிஸ்து நீக்கிப் போடுவதால், நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. பேதுரு சொல்லுகிறார். "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேதுரு 2:24) ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் பெரிய சுமைகளை தங்கள் தலைகளிலும் தோள்களிலும் சுமந்து கொண்டு செல்லுவதை நாம் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு சுமையை நான் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, யாராவது என்னிடம் எப்போதாவது வந்து, அந்த சுமையை தானே சுமப்பதாகப் பொறுப்பேற்றுக் கொண்டால் எவ்வளவு அருமையாக இருக்கும் என்று நான் பலமுறை சிந்தித்ததுண்டு. நல்லது நாம் நமது பாவச்சுமையை தாங்க முடியாமல் இருக்கிறோம். சுமை மிகவும் பாரமாக இருக்கிறது, வேதனையும் இருதய நோயும் ஏற்படுத்துகிறது. கர்த்தர் அந்த சுமையை நம்மிடமிருந்து அகற்றி விடக்கூடும் என்பதை சிலர் அறியாமல் யாரிடம் போவது என்று அறியாமல் அவர்கள் பைத்தியம் பிடித்து

அலைகின்றனர் அல்லது தற்கொலை செய்து தங்கள் சொந்த வாழ்வை முடித்துக் கொள்ளுகின்றனர். ஆனால் இயேசு நம்மிடம் வந்து அந்தப் பாரமான பாவச்சுமையை நம்மிடமிருந்து நிரந்தரமாக நீக்கிப் போட முடியும். உங்களுக்கு இயேசு கூறியது நினைவிருக்கிறதா? "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாகவும், என் சுமை இலகுவாகவும் இருக்கிறது என்றார்" (மத்தேயு 11:28-30) அது உண்மையாகவே இருக்கிறது.

நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதின் மூலம், நாம் கொடுக்க வேண்டிய கடன்கள் தள்ளுபடியாகின்றன. மாதிரி ஜெபத்திலே இயேசு தமது சீடர்களுக்கு ஜெபம் செய்யக் கற்றுக் கொடுத்தார். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12) பின்னர், மத்தேயு 18:27-32 வசனங்களில், அதிக கடன்கள் உள்ள ஒரு வேலைக்காரனைப் பற்றிய கதையை படிக்கிறோம். அவனது வேண்டுகோளுக்கிணங்கி அவனுடைய எஜமான் அவன் கொடுக்க வேண்டிய கடனைத் தள்ளி, அவனை மன்னித்து விடுகிறார். பின்னர் கதை தொடரும் போது, அந்த வேலையாள் அவனுடைய உடன் வேலையாளிடம் சென்று அவன் தரவேண்டிய ஒரு சிறு கடன் தொகைக்காக கடிந்து கேட்கிறான். அவன் தர இயலாமல் இருந்தபோது அவனை அடிப்பித்தான். பின் அவனுடைய எஜமான் இதைக் கேள்விபட்ட போது, அவனுக்கு ஆள் அனுப்பி அவனைனக் கூப்பிட்டு, நான் உனது கடனை மன்னித்திருக்க, உனக்குத்தர வேண்டிய சிறு கடனுக்காக உன் உடன் வேலையாளை ஏன் அடிப்பித்தாய் என்று கேட்டு, அவனுடைய கெட்ட செயலுக்காக அவனை சிறையில் அடைத்தான் நமது கடன்கள் அனைத்தையும் நமது கர்த்தர் ரத்து செய்து நம்மை விடுவித்து விட்டார். இது மிகவும் அருமையான காரியமல்லாவா! அப்படியிருக்கையில், நமக்குக் கடன்பட்டிருப்போரின் மேல் நாமும் இரக்கப்பட்டு அவர்களை மன்னிக்க வேண்டும்.

தேவனின் கிருபையால் நாம் மன்னிக்கப்படுகிறோம். அதாவது நாம் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள ஒரு போதும் இயலாது. இரட்சிப்பை சம்பாதித்துக் கொள்ளும் அளவிற்கு நாம் நற்செயல்களைச் செய்யவோ அல்லது நல்லவர்களாக நடக்கவோ ஒரு போதும் முடியாது. கர்த்தர் செய்யச் சொன்ன எல்லாவற்றையும் நாம் செய்த போதிலும், மீண்டும் தேவனுடைய கிருபையே நம்மை இரட்சிக்கும். பவுல் கூறும் போது, "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது

உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:8, 9) என்றார். "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதாக இருக்கையில், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?" என பேதுரு சொன்னார் (1 பேதுரு 4:18) தேவனை அறியாதவர்களையும் நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களையும் ஆக்கினைக்குள்ளாக கர்த்தர் மீண்டும் வருகிறார். (2 தெச.1:7-9) தேவனுடைய கிருபைக்கும் கருணைக்கும் அவருக்கு நன்றி சொல்லுவோம். நாம் இரட்சிக்கப்படத் தகுதியற்றவர்களாக இருந்த போதிலும், நாமாகத்தானே இரட்சிக்கப்பட போதுமானவற்றை நம்மால் ஒருபோதும் செய்யமுடியா விட்டாலும், தேவனுடைய கிருபையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம், நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை பெறுகிறோம்.

இறுதியாக, மன்னிப்பு அடைவது என்றால் நாம், சுத்தப்படுத்தப்பட்டிருக்கிறோம், கழுவப்பட்டிருக்கிறோம். நாம் புதிய சிருஷ்டியாக மாறியுள்ளோம் என அர்த்தம். கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிந்ததின் மூலம், நமது பாவங்களுக்கு நாம் மரித்தோம். திருமுழுக்கில் கர்த்தரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அதன் பின்னர், புது ஜீவனாக நடமாட உயிர்ப்பிக்கப்பட்டோம் (ரோமர் 6:3-6). உன் பாவங்கள் கழுவப்பட வேண்டி திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள சவுலுக்குக் கூறப்பட்டது. (அப்.22:16). நாம் மீண்டும் பிறக்க வேண்டும் அல்லது புது சிருஷ்டியாக மாறி, கர்த்தரின் ராஜ்யத்திற்குள் அல்லது சபைக்குள் பிரவேசிக்க வேண்டும். (யோவான் 3:3-5). இப்படியாக ஒருவன் மன்னிப்பு அடைந்தால், பழையவை ஒழிந்தன, இதோ எல்லா காரியங்களும் புதிதாயின (2 கொரி. 5:17) மன்னிப்பு அடைந்து, நாம் புதிய வாழ்வை தொடங்கலாம் என்பது மிகவும் அருமையான காரியமல்லவா!

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றனவா? தாங்கள் நல்லவர்களாக இருப்பதாக சிலர் உணருகிறார்கள். ஆனால் ஒரு போதும் அது சரியல்ல, மற்றும் சிலநேரம் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட தாங்கள் தகுதியற்றவர்களாக இருப்பதால், கர்த்தர் அவர்களை ஒரு போதும் மன்னிக்க மாட்டார் என்று நினைகின்றனர். இதுவும் தவறான ஒரு எண்ணமே, உங்களுக்கு மன்னிப்பு வேண்டுமென்றால், அதை அடைய இயலும். ஆம், உங்களுடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்படவும், நிரந்தரமாக அகற்றப்படவும் முடியும். எப்படி? கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதினால் மட்டுமே. அது எளிமையாக இல்லையா? அவர் கேட்பதோ மிகக் கொஞ்சம், திருப்பித் தருவதோ மிக அதிகம். அவரை சோதித்துப் பாருங்கள், மன்னிப்பின் மகிழ்ச்சியை அறிந்து கொள்ள வாருங்கள். உண்மையிலேயே உங்கள் வாழ்வில் அது ஒரு புது அர்த்தத்தைக் கொடுக்கும்.

**தமிழில்**
**எஸ்.எஸ். ராஜன்**

---

**ஒரு வழி** பகுதி 1ன் விடை அடுத்த இதழில்.

# தெரிந்து கொள்ளுங்கள்

## சரியான மொழி பெயர்ப்பு வேதாகமத்தை படியுங்கள்



சமய கோட்பாடுகளில் வெறிகொண்ட கிறிஸ்தவரல்லாத சிலர் தங்களுடைய சொந்த வேதாகம "மொழி பெயர்ப்புகளை" அறிமுகப்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டியது மிகமிகமுக்கியமாகும். இவற்றில் சில, உண்மையான பரிசுத்த வேதவாக்கியங்களைப் போல தோன்றினாலும், அவைகள் தவறான விளக்கங்களாலும், பொய்களாலும் சத்தியத்தைப் புரட்டுகின்ற கருவிகளாகும். சமய கோட்பாடுகளின் வெறியர்கள், தங்களுடைய வித்தியாசமான கோட்பாடுகளை போதிப்பதற்காக இவைகளை உபயோகித்து, அறியாமையில் உள்ள மக்களை ஏமாற்றி, தங்கள் வலையில் விழச் செய்கிறார்கள்.

இது ஒரு புதிய பிரச்சினை அல்ல சமய கோட்பாடுகளின் வெறியர்கள் ஆதி அப்போஸ்தலரின் காலத்திலும் இருந்தார்கள். (2 பேது. 3:16) இவர்களுடைய பொய்யான கோட்பாடுகளை தவறானவை என்று நிரூபிப்பதற்காக புதிய ஏற்பாட்டின் பல புத்தகங்கள் எழுதப்பட்டன.

நீங்கள் உங்களையும், நீங்கள் வழிநடத்துகிற மக்களையும், இவைகளிலிருந்து தற்காத்துக் கொள்ள வேண்டுமென்றால் உண்மையான வேதவாக்கியங்களை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும்! இதை நீங்கள் செய்வதற்கான ஒரே வழி பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை வேதாகமத்தின் வாயிலாக அறிந்து அதற்கு கீழ்ப்படியுங்கள். ***- Selected***

## பொது அறிவுக் களஞ்சியம்

**குழந்தைகள் தினவிழா :** நவம்பர் திங்கள் பதினான்காம் நாள் ஒவ்வோர் ஆண்டும் மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் விழா குழந்தைகள் தின விழாவாக கொண்டாடப்படுகிறது.

**மேதினம் :** மே திங்கள் முதல் நாள் உலகத் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

**ஆசிரியர் தினம் :** ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் திங்கள் 5-ம் நாள் டாக்டர் இராதாகிருஷ்ணனின் பிறந்த நாள் விழா ஆசிரியர் தின விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**குடியரசு நாள் :** ஜனவரித் திங்கள் 26ம் நாள் இந்தியா குடியரசு ஆனதால் இந்நாள் குடியரசு நாள் என அழைக்கப்படுகிறது.

**சுதந்திர நாள் :** ஆகஸ்டு திங்கள் 15ம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்ததை சுதந்திர நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**தேசிய ஒருமைப்பாட்டு நாள் :** அக்டோபர் மாதம் 31ம் நாள் மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவு தினம், தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**தியாகிகள் தினம் :** ஜனவரித் திங்கள் 30ம் நாள் அண்ணல் காந்தியின் மறைவு நாள், தியாகிகள் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

**தேச விரோத சக்தி எதிர்ப்பு நாள் :** முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இறந்த நாளான மே 21ம் தேதி தேச விரோத சக்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## பகுதி 1 இறுதித் தேர்வு

- Roger Dickson

**தற்சோதனை**

1. _____ நாம் எங்கிருந்து வந்தோம் என வேதாகமம் கூறுகிறது? (A) பரிணாம வளர்ச்சியினால் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். (B) தேவசாயலில் நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம். (C) வேதாகமம் நமது ஆரம்பத்தைக்குறித்து விவரிக்கிறதில்லை. (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.
2. _____ தேவன் நமது சிருஷ்டிகராயிருப்பதினால், நாம் என்ன தீர்மானிக்க வேண்டும்? (A) நமக்கு கட்டளையைக் கொடுப்பதற்கு அவர் அதிகாரமுடையவர் (B) அவர் அவரது கட்டளைக்குக் கீழ்படிதலை எதிர்பார்க்கும் அதிகாரமுடையவர் (C) அவரது கட்டளைப்படி அவர் நம்மை நியாயந்தீர்ப்பார் (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.
3. _____ திறமையுடன் தெரிந்து கொள்ளுதலை உருவாக்கும்படி நாம் தனித்த சமய சுதந்திரவாளிகளாயிருப்பதினால் தேவனுடைய கற்பனைகளோடு நாம் எவ்வித உறவு வைத்துள்ளோம்? (A) நாம் தேவனுடைய கற்பனைகளின் அடிப்படையில் தெரிந்து கொள்ளுதலை உருவாக்க வேண்டும். (B) நமது தெரிந்து கொள்ளுதலுக்கு நாம் பொறுப்பாளிகளாக இருப்போம். (C) அவரது நீதி நியமங்களின்படி தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார் (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.
4. _____ நன்மை தீமை அறியத்தக்க கனியை ஆதாம் புசித்தபோது, தேவனோடுள்ள அவனது ஐக்கியத்திற்கு தனிப்பட்ட விதத்தில் என்ன நடந்தது? (A) அவன் தேவனோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டான் (B) பிறகு அவன் தேவனுடைய நீதி நியமங்களை புரிந்து கொண்டான். (C) தேவன் தமது கட்டளைகளை மாற்ற அவன் காரணமானான் (D) அவன் ஆவியில் மரித்தான்.
5. _____ தேவனிடமிருந்து ஆவிக்குரிய பிரிவு ஏற்பட்டதைப் பற்றி நாம் நினைக்கும் போது, நாம் இன்னும் எதைப் பற்றி நினைவு கூற வேண்டும்? (A) சரீர மரணம் (B) ஆவிக்குரிய மரணம் (C) நித்திய ஜீவன் (D) இரட்சிப்பின் நமது நிச்சயம்.
6. _____ நாம் ஏன் சரீரத்தில் மரிக்கிறோம்? (A) நமது தனிப்பட்ட பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது (B) ஏனென்றால் ஆதாம் ஜீவ விருட்சத்தினிடமிருந்து பிரிக்கப்பட்டான் (C) ஏனென்றால் ஆதாம் ஆவியில் மரித்தான் (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.
7. _____ சரீர மரணம் என்பது . . . (A) ஆதாமுடைய பாவத்தின் விளைவு (B) ஆதாமுடைய பாவத்தின் குற்றம் (C) . . . சிருஷ்டிப்பினால் மனிதன், மேல் வந்த தேவ சாபம் (D) . . . நமது சுயபாவத்தின் விளைவு.

8. _____ ஏன் அனைவரும் ஆவியில் மரித்துள்ளனர்? (A) ஏனென்றால் எல்லாரும் ஆதாமினுடைய பாவத்தின் குற்றத்தை அநுபவிக்கின்றனர் (B) ஏனென்றால் ஆதாம் ஜீவ விருட்சத்தினிடமிருந்து பிரிக்கப் பட்டான் (C) ஏனென்றால் நாமனைவரும் பாவஞ் செய்கிறோம் (D) ஏனென்றால் நாம் பிறவி பாவிகள்.

9. _____ தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஸ்திரீயின்வித்து சாத்தானுக்கு எதிர்காலத்தில் என்ன செய்யப் போவதாக வாக்களித்தார்? (A) சாத்தான் அவனுடைய கிரியைகளின் முறைகளை மாற்றுவான் (B) சாத்தான் வலிமையுடைய வனாயிருப்பான் (C) சாத்தான் தனது வல்லமையில் மனிதர்களைக் கொல்லும்படியான கிரியை நடப்பிப்பவனாயிருப்பான் (d) சாத்தான் ஆசீர்வதிக்கப் பட்டவனா யிருப்பான்

10. _____ மனிதனுக்கு நீதி நியமங்களை ஏன் தேவன் கொடுக்கக் கூடியவராயிருந்தார்? (A) ஏனென்றால் நாம் நமது சுயநீதி கட்டளைகளை உருவாக்க முடியவில்லை (B) ஏனென்றால் நமது வழிகளை சீர்படுத்துவதற்கு நாம் நீதி கட்டளையை பெற்றிருக்க வேண்டும். (C) ஏனென்றால் நமது சுய நடக்கைகளை ஒழுங்கு படுத்த இவை மனிதனுக்குள் இல்லை. (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.

11. _____ பாவத்தைக் குறித்ததான மனிதனுடைய சிக்கலான நிலை என்ன? (A) அவன் தன்னை இரட்சித்துக் கொள்ளும்படிக்கு தேவனுடைய கற்பனைகளை முழுமையாகக் கைக்கொள்ள முடியாது (B) அவன் தன் பாவங்களுக்கு பரிகாரமாக நற்கிரியைகளைச் செய்ய முடியாது (C) மனிதன் சிக்கலான நிலையைக் கொண்டிருக்கவில்லை (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.

12. _____ 'ஏவப்படுதல்' (உந்தப்படுதல்) என்ற வார்த்தையின் பொருள் என்ன? (A) பொறுப்பு (B) இரட்சிப்பு (C) தேவ சுவாசம் (D) தேவ சிருஷ்டிப்பு.

13. _____ வேதாகமத்தில் காணப்படாதது அல்லது வலியுறுத்தப் படாதவைகளான மனித கற்பனைகளின் மேல் ஒருவன் கட்டியிருந்தால் அவன் என்ன செய்தவனாயிருக்கிறான்? (A) அவன் தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுத்து போட்டியிருக்கிறான் (B) அவன் தேவனுடைய வார்த்தையோடே கூட்டியிருக்கிறான் (C) பக்திக்கடுத்த அல்லது கோட்பாடுகளுக்கடுத்த எதையும் தவறாக செய்தவனாயிருக்கிறான்(D) அவன் தேவனை பிரியப்படுத்தியிருக்கிறான்.

14. _____ ஒருவன் தனது சுய மதப்பாரம்பரியங்களை உருவாக்கி தேவனுடைய வார்த்தையை தள்ளின பிறகு, தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்ளுவதற்கான ஆலோசனையில் அவன் என்ன செய்கிறான்? (A) அவன் தேவ வார்த்தையை தேடுகிறான் (B) தேவ வார்த்தையைப் புறக்கணிக்கிறான் (C) அவன் பாரம்பரியங்களையும் தேவ வார்த்தையையும் கவனமாகக் கைக்கொள்கிறான் (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.

15. _____ தனது மதப்பாரம்பரியங்களின்படி ஆராதனை செய்யும்படிக்கு தேவ வார்த்தையைத் தள்ளி விட்டு ஆராதிக்கிற ஒருவனுடைய

ஆராதனையை தேவன் எப்படி கருதுகிறார்? (A) வீணான (B) ஏற்றுக்கொள்ளப்பட்ட (C) கேள்விக்குரிய (D) விருப்பமான

16. _____ மதப்பற்றுள்ள மக்கள் வேதாகமத்தைப்பற்றி அறியாத போது, தேவனை ஆராதிக்கும் தங்கள் ஆராதனையில் என்ன செய்கின்றனர்? (A) தங்களது சுய ஆராதனையை நிர்ணயிக்கின்றனர் (B) தங்களது முற்பிதாக்களின் பாரம்பரியங்களின் படியான ஆராதனை (C) தேவன் எந்த ஆராதனையும் ஏற்றுக் கொள்கிறார் என தங்களையே நம்பப்பண்ணுகின்றனர்

17. _____ தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதைப்பற்றி பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறதான போதனைகளை ஒருவன் அறிந்து கொள்ளக் கூடிய ஒரே வழி எது? (A) ஒருவனுடைய உள்ளுணர்வு மூலம் (B) அவன் ஆராதிக்கிறபடி ஒருவனுடைய உணர்வு மூலம் (C) ஒருவனோடு ஆவியானவர் பேசுவதன் மூலம் (D) வேதாகமத்தில் உள்ள ஆவியானவரின் போதனைகளைப் படிப்பதன் மூலம்

18. _____ பரலோக பாக்கியத்தை தேவன் கொடுக்கும்படிக்கு அவரை கடனுக்குள்ளாக்கி, தனது மன்னிப்பிற்காக ஒருவன் எதை முழுமையாக தேவனுக்கு திருப்பித் தரமுடியும்? (A) அவரது கற்பனைகளை முழுமையாக கொள்வது (B) பல நற்காரியங்களை செய்வது (C) அவரது ஈவுக்காக தேவனுக்கு நாம் போதுமானவற்றை திரும்பச் செலுத்த முடியாது (D) ஒருவன் எதையும் செய்ய விரும்புகிறதில்லை.

19. _____ தேவனுடைய கற்பனையை கைக்கொள்வதன் மூலமே இரட்சிக்கப்படுதல் என்பது ஏன் கூடாதது? (A) ஒருவனும் தேவனுடைய கற்பனையை முழுமையாகக் கைக்கொள்ள முடியாது (B) கற்பனையானது குறைவுள்ளது (C) நாம் ஒரு போதும் எல்லா கற்பனையையும் அறிய முடியாது (D) கற்பனையின் படி தேவன் நியாந்தீர்க்கமாட்டார்.

20. _____ ஒருவன் ஏன் தேவனுடைய மன்னிப்பை நற்கிரியைகளைச் செய்வதன் மூலம் சம்பாதிக்க முடியாது? (A) பாவ மன்னிப்பானது கட்டளைகளை கைக்கொள்வதின் மூலம் வருகிறது, நற்கிரியைகளினாலல்ல, (B) நாம் ஒரு போதும் தேவனுடைய ஈவாகிய ரட்சிப்பை போதுமான நற்கிரியைகளைச் செய்வதன் மூலம் பெறமுடியாது (C) நற்கிரியைகள் அல்ல, மிருகங்களின் பலி மன்னிப்பைக் கொண்டு வருகிறது (D) எல்லாம் முன் கூறப்பட்டவை.

## வேத அறிவுப் போட்டி எண் 5ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சீப்புருதீவு | – | அப். 21:16 |
| 2. | ஆதாம் | – | 1 தீமோ. 2:13 |
| 3. | புறஜாதிகளிலுமிருந்து | – | ரோம. 9:24 |
| 4. | தாவீது | – | 1 நாளா. 14:11 |
| 5. | கீதியோன் | – | நியா 6:15 |
| 6. | புது | – | 2 கொ. 3:6 |
| 7. | அழிவை | – | கலா. 6:8 |
| 8. | பத்துமுறை | – | எண். 14:22 |
| 9. | பண்படுத்தவும், காக்கவும் | – | ஆதி. 2:15 |
| 10 | அழிவை | – | நீதி. 17:19 |

சிறுவர் பகுதி

# அத்திமரம்

**வேதபகுதி : லூக்கா 13 : 6–9**



அத்திமரத்தை நீங்கள் பார்த்திருப்பீர்களென்று நான் நம்புகிறேன். அப்படி ஒருவேளை நீங்கள் பார்க்காம இருந்தா இனி வரும் நாட்களிலாவது அத்திமரத்தை பார்த்து அதில் ஒரு கனியை பறித்து சாப்பிட்டுபாருங்க.

நமதாண்டவர் அத்திமரத்தை பற்றி ஒரு உவமையை சொல்லியிருக்கிறாரு அது என்ன உவமை என்று உங்களுக்கு தெரியுமா? நான் சொல்ரத கவனமா கேளுங்க. ஒரு மனிதன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான். அதில எப்படா அத்திப்பழம் பறிக்கலாம் என்று ஆவலோடு காத்திருந்தான். வருஷங்கள் பல கடந்தன, அவனுக்கோ கோபம், தன் வேலைக்காரனை அழைத்து இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே நான் கனியை தேடி வருகிறேன். ஆனால் ஒன்றையும் காணவில்லையே! ஏன் இது நிலத்தையும் கெடுக்கிறது இதனால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. ஒன்று செய் நீ இதை வெட்டிப்போடு என்று தன் வேலைக்காரனுக்கு சொன்னான்.

வேலைக்காரனோ! மரத்தின் மீது இரக்கப்பட்டு ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும். நான் இதைக் கவனமாக பராமரித்து உரமிட்டு காத்து வருகிறேன். இனி கனி கொடுக்குமா என்று பார்ப்போம். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால் பின்பு இதை வெட்டிப்போடலாம் என்று தன் ஏஜமானுக்கு அறிவித்தான்.

அன்பான தம்பி, தங்கைகளே இந்த உவமையிலிருந்து நீங்கள் என்ன தெரிஞ்சுக்கீட்டீங்க? ஆண்டவர் நம்மை அவருடைய தோட்டமாகிய திராட்சதோட்டத்திலே அத்திமரத்தைப் போல நட்டு இருக்காரு. நாம அவர் எதிர்பார்க்கிறபடி கனி கொடுக்க வேண்டும். அப்படினா! ஆவிக்குரிய கனிகள் ஒன்பதும் கலாத்தில் 5:22,23-ல் சொல்லப்பட்டபடி கொடுக்கனும். நம் ஜீவியத்தில் இது காணப்பட வேண்டும். அப்பா, அம்மாவுக்கு கீழ்ப்படியனும், ஒழுங்கா வேத வாசிக்கனும், ஞாயிறு பள்ளிக்கு தவறாது போகனும். இப்படி இருந்தா, நம் ஆண்டவர் நம்மை அதிகமா நேசிப்பாரு நாம கேட்டதெல்லாம் அவர் சித்தப்படி கொடுப்பாரு. நீங்க கனி கொடுக்கிற அத்திமரமா இருப்பீங்களா!

***மனப்பாட வசனம் :***

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்.
எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" *(யோவான் 15:8)*

பெண்கள் பகுதி

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

# *Is a woman required to cover her Head while praying?*

***Betty Burton Choate***



"ஸ்திரீயானவள் கண்டிப்பாக ஒரு துணியினால் முக்காடிட்டுக்கொள்ளவேண்டும் என்ற போதனையைத் தெரியப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் சித்தம் கொண்டிருப்பாரென்றால், ஏன் மற்ற எல்லா வசனங்களிலும் மிகத்திட்டமான வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை? பதிலாக, அவர் முக்காடிடுதல் என்ற பதத்தை மாத்திரமே பயன்படுத்தினார். மேலும் ஸ்திரீயினது தலைமயிரே அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டுள்ளது என தெளிவாகக் கூறியுள்ளார் மேலும் அவர் அவளது தலைமையிரானது- ஒரு முக்காட்டுத் துணியல்ல- அவளுக்கு மகிமையாக இருக்கிறது என விளக்கமளிக்கிறார்.

இதற்கு மாறாக, புருஷனுடைய தலை மூடிக்கொள்ளப் படவேண்டியதில்லை. எல்டர்டு எக்லோஸ் இதுபற்றி

"அவன் தலை மூடப்பட்டிருத்தல்" என்பது ஒரு வியாக்கியானமே தவிர, இது ஒரு மொழிபெயர்ப்பல்ல என எழுதினார். "அவனது தலையிலிருந்து ஏதோ தொங்கிக் கொண்டிருத்தல்"என லென்ஸ்கி மொழிபெயர்த்துள்ளது சரியானதாக உள்ளது.

1 கொரிந்தியரைக் குறித்த இவரது வியாக்கியானத்தில், பெட்டன் கோஃப்மேன் கூறுகிறார், விவாகத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய இந்த கருத்து பின்பு அப்போஸ்தலரால் "புருஷன் தலைமயிரை நீளமாக வளர்கிறது, அவனுக்குக் கனவீனமாயிருக்கிறது" (வச. 14) என தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது போல தலையிலிருந்து வேண்டிய அளவு நீளமாகத் தொங்கி கொண்டிருத்தல் என்பது "நீளமான தலைமயிர்" என்ற பதத்திற்கு ஒப்பிடப்படும்.

2ம் நூற்றாண்டில் இதுபற்றி கிளமென்ட் அலெக்சாண்டர் தன்னுடைய கூற்றில் புருஷனுடைய தலைமயிர் நீளமாயிருப்பதைக் குறித்து இவ்விதமாக எழுதுகிறார்; தலைமயிரானது நீளமாக கீழே தொங்கி கண்களை மறைப்பதைபோல வளர்வதில்லை......... கத்தரிக்கப்பட வேண்டியதாயிக்கிறது .....ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை இலங்கரித்துக் கொள்வது போல தலையிலிருந்து பின்னப்பட்டு தொங்கவிடப் படலாகாது." (Ante Nicene Fathers, Wm B.Eerdmans Publishing Co., லிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது)

நிச்சயமாக, ஸ்திரீயானவளைக் காட்டிலும் புருஷனானவன் தன் தலைமயிரை குட்டையாக அடையாளப்படுத்தி கொண்டிருப்பது உண்மையென சுபாவமே தெளிவுபடுத்துகிறது போல வரலாறு முழுவதும் உவகமுழுவதும் இது பொதுவான உண்மையாகக் கருதப்படுகிறது. இது புருஷன் சிறிதளவுகூட தலைமயிரை வைத்துக்கொள்ளக் கூடாது என பொருள்படுவதில்லை. "நீளம்" என்பது சென்டிமீட்டர் அல்லது இஞ்சில் குறிப்பிடப்படவில்லை. மாறாக, இது நமது உடலின் ஒரு பாகமாயிருக்கிறபடியால் சரீரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்க தலைமயிரை நீளமாக வளர்ப்பது உதவியாகயிருக்கிறது.

இந்த பகுதியின் நோக்கம்: புருஷர்கள் ஒரு ஸ்திரீயினுடைய தோற்றத்தை உடையவர்களாய் ஆராதனையில் தமக்கு முன் வந்து தம்மை கனவீனப்படுத்துவதை தேவன் விரும்பவில்லை, ஒரு கிறிஸ்தவ பெண்ணும் நாகரீகமென்று புருஷனைப்போல தன் தலைமயிரை குட்டையாகக் கத்தரித்துப் போட்டு முக்காடிட்டுக் கொள்ளாமல் தன்னுடைய கணவனை கனவீனப்படுத்துவதையும் தேவன் விரும்பவில்லை என்பதை விளக்குவதாகும்.

வேதாகமத்ததில் விளக்கப்பட்டுள்ள இந்தக் குறிப்பிட்ட "முக்காடிட்டுக்கொள்ளுதல்" என்ற வினாவானது கலாச்சார வழக்க மாற்றத்திற்கேற்ப மாற்றப்படுவதற்கில்லை. இது அதிகாரமுடைய தேவனுடைய கட்டளையைச் சார்ந்ததாயும், மேலும் ஸ்திரீ-புருஷன் இவர்களது நடைமுறையும் தோற்றமும், ஆதாம் ஏவாலுடைய காலத்திற்கு அழைத்துச் செல்லுகிறதாகவுமிருக்கிறது.

ஆனால் இயற்கை முக்காடிட்டுக் கொள்ளுவது பற்றிய கேள்வி, தன்னுடைய கலாச்சார காலத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் பாவமில்லாததாகவுமிருக்கிறது.

- தங்களுடைய திருமணத்திற்கு முன் ஈசாக், ரெபெக்காளைக் காண்பதற்கு வயல்வெளியிலே வருகிறதை ரெபெக்காள் கண்டபோது, "அவள் முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டாள்" என ஆதியாகமம் 24:65 கூறுகிறது. திருமணமாகாத பெண்கள் அடக்கத்திற்கு அடையாளமாக முக்காடிட்டுக்கொள்வது அந்த இடத்தின் கலாச்சார வழக்கம் என தெளிவுபடுத்துகிறது.
- இருந்த போதிலும், தாமார் யூதாவை வேசிதனத்துக்கு உட்படுத்த, "............ அவள் தன் கைம் பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு (முக்காட்டுத் துணி என தெளிவாக வெளிப்படுத்தபடவில்லை) முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு .........." என ஆதி. 38:14ல் நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தின் கலாச்சார வழக்கத்தில் முக்காடு வேசிக்கு அடையாளமாக மாறியிருந்தது.
- "....... அவள் அழகுள்ளவளானபடியால்" (ஆதி. 12:14, 26:7) சாராளும், ரெபெக்காளும் எகிப்து, பெலிஸ்திய ராஜாக்களின் அந்தப்புரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். என வாசிக்கிறோம். அந்நாட்களில் அவ்விடத்து வழக்கம் பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டியது. அவசியம் என வலியுறுத்தவில்லை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

- இன்று பெண்கள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் ஒழுக்கமற்ற செயல் அல்லது கணவனுக்கு அவமதிப்பை கொண்டுவரும் செயல் என கலாச்சார வழக்கத்தில் கருதப்பட்டால் கலாச்சார வழக்கத்தைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக கலாச்சாரத்தை மதிப்பது ஞானமுள்ளதாக இருக்கும் அல்லது தன் கணவனுக்குக் கீழ்படியும் மனைவி எனக் காண்பிக்க வேறு ஏதாவது 'அடையாளம்' சமுதாய வழக்கத்தில் இருக்குமானால் அந்த வழக்கத்தைப் பின்பற்றுவது சிறந்ததாக இருக்கும், ஆனபடியால் அவள் "........ விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்" *(1 தீமோ. 5:14)*

இப்பகுதியின் முடிவுரையில் இதுவரை பார்த்த எல்லாக் கருத்துக்களையும் மறுபடியும் காண்போம்.

- இதன் முழுப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டளைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார், புருஷனுக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்; ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான். புருஷன் ஸ்திரீக்காக உண்டாக்கப்பட்டவனல்ல புருஷனானவன் தேவசாயலும் மகிமையுமாயிருக்கிறான்; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள், புருஷனிலிருந்து தோன்றினவளாயுமிருக்கிறாள்.
- இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால் புருஷனுக்கும் ஸ்திரிக்குமிடையே தோற்றத்தில் வெளிப்படையான அடையாளமிருக்க வேண்டும். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே போதிக்கிறது.
- ஸ்திரீயானது தலைமயிர் அவளுக்கு துணியாலான முக்காட்டிற்குப் பதிலாக (முக்காடாக) கொடுக்கப்பட்டிருக்கிறது.
- தலையின் முக்காடு என்பது தேவனால் ஒழுங்குப்படுத்தப்பட்டது. கூடுதலாக துணியிலான முக்காடு பல வித்தியாசமான கலாச்சார நடைமுறைக்கேற்ப ஏற்படுத்தப்படுவதேயாகும், வேதாகமத்தில் உள்ளதல்ல.

*முற்றிற்று!*

**தமிழில் : J. குளோரி அர்ஜுனன்**

## வேத அறிவுப்போட்டி எண் 5ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. A. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. A. ஜோதிகாந்தம் - போடப்பாறை
4. M. நோயல்ராஜ் - சேலம்
5. S. கிறிஸ்டியான் - சென்னை
6. V. ரவிமோகன்ராஜ் - குளத்தூர்
7. L. மனாசே - யாடமாரி (A.P.)
8. M. சம்மா - அரக்கோணம்

## நீதிமான்களைக் குறித்து நீதிமொழிகளில்...

*T. கிறிஸ்டிகுமார்*

1. அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ் ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார் நீதி. 2:7
2. ................. நீதிமான்களின் பாதைகளைக் காத்துக் கொள்வாயாக. நீதி. 2:20
3. ................. நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது நீதி 3:32
4. ................. நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார் நீதி. 3:33
5. ................. நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும் நீதி. 4:18
6. ................. நீதிமானுக்கு உபதேசம்பண்ணு, அவன் அறிவில் விருத்தியடைவான் நீதி. 9:9
7. கர்த்தர் நீதிமான்களைப் பசியினால் வருந்த விட்டார் நீதி. 10:3
8. நீதிமானுடைய சிரசின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கும் நீதி. 10:6
9. நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்; நீதி. 10:7
10. நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று; நீதி. 10:11
11. நீதிமானுடைய பிரயாசம் ஜீவனையும், நீதி. 10:16
12. நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி; நீதி. 10:20
13. நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்; நீதி. 10:21
14. ................. நீதிமான் விரும்புகிறகாரியம் அவனுக்குக் கொடுக்கப்படும் நீதி. 10:24
15. ................. நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன்; நீதி. 10:25
16. நீதிமான்களின் நம்பிக்கை மகிழ்ச்சியாகும்; நீதி. 10:28
17. நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை; நீதி. 10:30
18. நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்; நீதி. 10:31
19. நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளைப் பேச அறியும்; நீதி. 10:32
20. நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான்; நீதி. 11:8
21. ................. நீதிமானே அறிவினால் தப்புகிறான். நீதி. 11:9
22. நீதிமான்கள் நன்றாயிருந்தால் பட்டணம் களிகூரும்; நீதி. 11:10
23. நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும்; நீதி. 11:21
24. நீதிமான்களுடைய ஆசை நன்மையே; நீதி. 11:23
25. ................. நீதிமான்களோ துளிரைப்போலே தழைப்பார்கள் நீதி. 11:28
26. நீதிமானுடைய பலன் ஜீவ விருட்சம்; நீதி. 11:30
27. இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே; நீதி. 11:31
28. ................. நீதிமான்களுடைய வேரோ அசையாது; நீதி. 12:3
29. நீதிமான்களுடைய நினைவுகள் நியாயமானவைகள்; நீதி. 12:5
30. ................. நீதிமான்களுடைய வீடோ நிலை நிற்கும் நீதி. 12:7
31. நீதிமான் தன் மிருகஜீவனைக் காப்பாற்றுகிறான்; நீதி. 12:10
32. ................. நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்; நீதி. 12:12
33. ................. நீதிமானோ நெருக்கத்தினின்று நீங்குவான்; நீதி. 12:13
34. நீதிமானுக்கு ஒரு கேடும் வராது; நீதி. 12:21
35. நீதிமான் தன் அயலானைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன்; நீதி. 12:26
36. நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான்; நீதி. 13:5
37. நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும்; நீதி. 13:9
38. ................. நீதிமான்களுக்கோ நன்மை பலனாக வரும் நீதி. 13:21
39. ................. பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்து வைக்கப்படும்; நீதி. 13:22
40. நீதிமான் தனக்கு திருப்தியாகப் புசிக்கிறான்; நீதி. 13:25

41. .................. நீதிமான்களுக்குள்ளே தயை உண்டு; நீதி. 14:9
42. .................. துன்மார்க்கர் நீதிமான்களுடைய வாசற்படிகளிலும் குனிவதுண்டு; நீதி. 14:19
43. .................. நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்; நீதி. 14:32
44. நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு; நீதி. 15:6
45. .................. நீதிமானுடைய வழியோ ராஜ பாதை நீதி. 15:19
46. நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்; நீதி. 15:28
47. .................. நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்; நீதி. 15:29
48. துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் நீதி. 17:15
49. நீதிமானை தண்டம் பிடிக்கிறதும், நியாஞ்செய்கிறவனைப் பிரபுக்கள் அடிக்கிறதும் தகுதியல்ல நீதி. 17:26
50. வழக்கிலே நீதிமானைத் தோற்கடிக்கிறதற்கு, துன்மார்க்கனுக்கு முகதாட்சிணியம் பண்ணுவது நல்லதல்ல; நீதி. 18:5
51. .................. நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான் நீதி. 18:10
52. தன் வழக்கிலே முதல் பேசுகிறவன் நீதிமான்போல் காணப்படுவான்; நீதி. 18:17
53. நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; நீதி. 20:7
54. நியாயந்தீர்ப்பது நீதிமானுக்குச் சந்தோஷமும், அக்கிரமக்காரருக்கோ அழிவுமாம். நீதி. 21:15
55. நீதிமானுக்குப் பதிலாகத் துன்மார்க்கனும், செம்மையானவனுக்குப் பதிலாக துரோகியும் மீட்கும் பொருளாவார்கள். நீதி. 21:18
56. .................. நீதிமானோ பிசினித்தனமில்லாமல் கொடுப்பான். நீதி. 21:26
57. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; நீதி. 23:24
58. துஷ்டனே, நீ நீதிமானுடைய வாசஸ்தலத்துக்கு விரோதமாய் பதிவிராதே; நீதி. 24:15
59. நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; நீதி. 24:16
60. துன்மார்க்கனைப் பார்த்து; நீதிமானாயிருக்கிறாய் என்று சொல்லுகிறவனை ஜனங்கள் சபிப்பார்கள், பிரஜைகள் அவனை வெறுப்பார்கள் நீதி. 24:23
61. .................. நீதிமான்களோ சிங்கத்தைப் போலே தைரியமாயிருக்கிறார்கள்; நீதி. 28:1
62. நீதிமான்கள் களிகூரும்போது மகாகொண்டாட்டம் உண்டாகும்; நீதி. 28:12
63. .................. அவர்கள் அழியும்போதோ நீதிமான்கள் பெருகுகிறார்கள் நீதி. 28:28
64. நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; நீதி. 29:2
65. நீதிமானோ பாடி மகிழுகிறான். நீதி. 29:6
66. நீதிமான் ஏழைகளின் நியாயத்தைக் கவனித்தறிகிறான்; நீதி. 29:7
67. .................. நீதிமான்களோ அவர்கள் விழுவதைக் காண்பார்கள் நீதி. 29:16
68. நீதிமானுக்கு அநியாயக்காரன் அருவருப்பானவன்; நீதி. 29:27



## ஒரு வருடத்தில் வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்க இதோ ஆலோசனை

ஒரு வாரத்திற்கு 23 அதிகாரம் படித்து வந்தால் நீங்கள் இவ்வருடத்திற்குள் பரிசுத்த வேதாகமம் முழுவதையும் படித்து விடலாம்.


சபையாக வாரம் ஒரு நாள் நடக்கும் வேத வகுப்பில் 23 அதிகாரம் தியானித்து வந்தால் இவ்வருட இறுதிக்குள் வேதாகமம் முழுவதையும் தியானித்து விடலாம்.

*முயற்சித்துப் பாருங்கள்* *கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக.*

# தேவராஜ்ய ஸ்தாபனம்

ஏசா. 2:2,3; மீகா. 4:1,2; யோவே. 2:28,29; தானி. 2:44; மத். 16:18,19; மாற். 9:1; அப். 1:6-8; கொலோ. 1:13.

1. "கடைசி நாட்களில்"
2. "எருசலேம் துவங்கி"
3. "அனைத்து தேசங்களும்"
4. "கர்த்தருடைய வீடு"
5. "அந்த ராஜாக்களின் நாட்களில்"
6. ராஜ்யம் பலத்தோடே வருகிறது




Dillard Thurman

பொருள் : பாடுகள் வழியே பரலோகம் செல்கின்றோம்.

ஆக்கியோன் : பேதுரு அப்போஸ்தலன்

காலம் : கி.பி. 65

**திட்டவரைக் குறிப்பு :**

1. இன்றைய பாடுகள் நாளைய வெற்றிகள் 1:1-25
2. கிறிஸ்துவின் பாடுகள் நம்முடைய முன்மாதிரி 2-3 அதி
3. கிறிஸ்துவினிமித்தம் பாடுபட்டால் கீர்த்தி பெறுவோம் 4:7-5 : 14

**சிறப்புச் செய்தி :**

1. பொன்னை அக்கினி சோதிக்கிறது.
2. விசுவாசத்தை உபத்திரவம் சோதிக்கிறது 1:6, 7;2:1, 19-20

| | |
|---|---|
| நாவும் நெருப்புத்தான்! | 3:14-4:14 |
| சோதனையை எதிர்பார்க்க வேண்டும் | 4:12 |
| சோதனை மகிழ்ச்சியானது | 4:19 |
| சோதனை கிறிஸ்துவுக்கு வந்தது | 1:11; 2:21; 5:1 |
| சோதனை ஓர் படிப்பினை | 2:21; 4:1-2 |
| சோதனை தேவனுடைய சித்தம் | 4:19 |

**வரலாற்று பின்னணி :**

யூத சமயத்திலிருந்து கிறிஸ்துவுக்குள் வந்து புது உடன் படிக்கையை கைக்கொண்டதினால் தேசமெல்லாம் சிதறடிக்கப்பட்டு போன மக்கள் "மகா துன்பத்தை" அனுபவித்தார்கள். ஆகையால் தேவ தாசர்களுக்கு... ஆறுதல் கூறி எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்குள் உறுதியாக நிலைத்திருக்க சொல்லி எழுதுகிறார்.

கீழ்படிதல் எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார்.

| | | |
|---|---|---|
| குடிமக்கள் | அரசாங்கம் | உறவு |
| எசமானர் | அடிமை | உறவு |
| புருஷன் | மனைவி | உறவு |
| கிறிஸ்துவுக்குள் | சகோதர | உறவு |

சிலுவையை பேதுரு தனக்கே உரிய பாணியில் 'மரம்' என குறிப்பிடுகின்றார்! (அப்5:30; 10:39; I பேது. 2:24)

**– Selected**

# வேத அறிவுப் போட்டி எண். 6

குறிப்பு :

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் கீழ்கண்ட கேள்விகளுக்கு வேத வசன ஆதாரத்துடன் விடைகளை இம்மாதம் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதுங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.

1. கர்த்தர் எந்த பாஷையில் சவுலே, சவுலே நீ ஏன் என்னைத்துன்பப்படுத்துகிறாய் என்று பேசினார்?
2. என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டு செல்லுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
3. சண்டைக்காரியும், கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் எதில் குடியிருப்பது நலம்?
4. அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற் போகிற எதற்குச் சமானமாயிருக்கிறான்?
5. பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம், முழுதுக்கும் அதிபதியாகவும் இருந்தவன் யார்?
6. நான் திரும்பி வராத வழியே போவேன் என்ற தாசன் யார்?
7. நல்லவன் முடசெடிக் கொத்தவன், செம்மையானவன் எதைப் பார்க்கக் கடுங்கூர்மையானவன்?
8. தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தவன் யார்?
9. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக யாருக்குள் வாசமாயிருக்கிறது?
10. தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் எந்த போதகராயிருக்க விரும்புகிறார்கள்?

## நடப்புச் செய்திகள்

*1. மேற்கு வங்க மாநிலத்தின் தலைநகர் கல்கத்தாவை இனி 'கோல்கட்டா' என்றழைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

*2. ஏலக்காய் ஆக்ஷனை கேரளாவில் நடத்த தற்காலிக அனுமதியை ஆக்ஷன் கம்பெனிகளுக்கு ஸ்பெசஸ்போர்டு வழங்கியுள்ளது.*

*3. இலங்கையில் தமிழர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையிலும் இனப்பிரச்சனைக் காண தீர்வு அமைய வேண்டும் என்று நார்வே தூதுக்குழு தலைவர் எரிக்கோல்ஹன் தெரிவித்துள்ளார்.*

*4. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள மத்திய சிறைகளில் 'சிறைவாசிகள் நீதிமன்றம்' மற்றும் 'சட்ட உதவி மையம்' அமைக்கப்பட்டு வருகிறது.*

*5. டெகரானில் நடைபெற்ற உலக சதுரங்க சாம்பியன் பட்டப் போட்டியில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றுள்ளார்.*

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001.
**Editor : B. Arjunan.**

**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்.**



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி

வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி

**All are Welcome**

**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **ENGLISH** | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| **KANNADA** | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST